# தூண்டி

## மாத இதழ்



புரட்டாதி - ஐப்பசி தூண்டல் - 8 விலை 15.00

சமூக — கலை — இலக்கிய — அறிவியல் ஏடு

ஊக்கிகள்.........

கலாநிதி நா. சுப்பிரமணியன்

திரு S. சிவலிங்கராஜா
M. A.

திரு அ. பஞ்சலிங்கம்
Bsc. Dip in. Ed. IDEPA New Delhi

திரு ஐ. கமலநாதன்
B. A. (Hons)

திருமதி S. அருள்நங்கை
B. A. (Hons)

கலாநிதி சபா. ஜெயராசா

திரு து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர் யாழ்

திரு சு. இரத்தினராசா
B. A. Dip in-Ed

திரு ஆ. இராஜகோபால்
(செம்பியன் செல்வன்)
B. A. (Hons) Dip. in Ed

கவிஞர் சோ. பத்மநாதன்
B. A. Dip. in. Ed

திரு M. S. ஸ்ரீதயாளன்
B. A. Dip. in. Ed.

திருமதி கோகிலாமகேந்திரன்
SLPS

திரு ந. விஜயசுந்தரம்
B. A. (Hons)

திரு பொன். அருந்தவநாதன்
B. A. (Hons)

திரு இராம ஜெயபாலன்


உங்கள் எண்ணங்களை
எழுத்துரு வாக்கிட

அபிராமி
அச்சகம்

சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.



# காலமும் சோதனையும்

3ம் இதழ் தாமதமே, வாசகர்களிடம் இதற்காக நாம் பணியத்தான் வேண்டும். இந்த பாய்மரக்கப்பல் காற்றை நம்பிப் போய்க் கொண்டிருந்தது. காற்றுக் குறைந்தாலும் பயணம் தடங்கல் தான். ஆனால் 2ம் கட்ட நகர்வின் பின் ஏற்பட்ட தடங்கலுக்கு வீசாத காற்று காரணமல்ல. காற்று புயலாக மாறியதே காரணம். தென்றல் புயலாக மாறினாலும் பயணம் தடங்கல் தான். எனவே இந்த தடங்கல் இனி ஏற்படக் கூடாது. எனவே காற்றை இனி நம்பமுடியாது. இனி இயந்திரம் பூட்டுவோம். இந்த முடிவோடு தான் 3ம் இதழ் உங்கள் கரங்களில் தவழ்கிறது. எல்லாமே காலம் தான்.

கோடைக்காலத்தில் குளம் வற்றிவிட்டதே என்று கொக்கு சவலைப்படக்கூடாது. மீண்டும் மழைக் காலம் வருகிறது. நடந்தவன் விழுவது வழமை. ஆனால் விழுபவன் எழுவதும் வழமை காலை வெய்யிலில் நிழல் முன்பக்கமாக விழுகிறது. ஆனால் மாலை வெய்யிலில் நிழல் பின்பக்கமாகவும் விழத்தானே செய்கிறது. எல்லாமே சோதனைதான்

**ஆசிரியர் குழு**

# பஞ்சாமிர்தம் 2

இருபெரும் பேச்சாளர்கள் சோட்டும், டெப்யூவும் ஒரு விருந்தில் இருவரும் சந்தித்தனர். டெப்யூ சொன்னார் ''சோட் பெரும் பேச்சாளர் அவரைப் பேச வைக்க, அவருடைய வாயில் நல்ல விருந்துணவைப் போடவேண்டியது தான்''

சோட் சொன்னார் ''கனவான்களே! என் வாயில் விருந்தைப் போட்டால் பேச்சு பியத்துக் கொண்டு வரும் என்பது உண்மை ஆனால் விருந்து உண்டதும், டெப்யூவின் பேச்சைக் கேட்டீர்களே நீங்கள் உண்ட உணவெல்லாம் வெளியே வந்துவிடும்.''

ஹெரிட்ரூமன் அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்தபோது ஒரு விருந்து நடந்து முடிந்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ட்ரூமன் இந்த உத்தியோகமே எனக்குப் பிடிக்கவில்லை' என்றார்.

உலகத்திலேயே அமெரிக்க ஜனாதிபதி பதவி தானே உயர்ந்தது என்று வியந்த நண்பர்கள் ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்'' என்று கேட்டனர்.

''இந்தப் பதவியிலிருந்தால் என்ன பிரமாதமான வருங்காலம் இருக்கிறதாம்!'' என்று அலுத்துக்கொண்டார் ட்ரூமன்.

கிளாட்ஸ்டனும் டிஸ்ரேலியும் ஒரு விருந்தில் சந்தித்துக் கொண்டார்கள். இருவரும் பலத்த வாக்குவாதப்பட்டனர். அப்போது கிளாட்ஸன் ''நீர் மக்களை அழிவான வழியில் அழைக்கிறீர். நீர் என் கண் முன்னாலேயே ஒருநாள் தூக்கிலிடப்படுவீர் அல்லது பெண் நோய் கண்டு இறப்பீர்'' என்றார்.

## புத்தொளி

இதனைக் கேட்ட டிஸ்ரேலி ''அப்படி நான் இறப்பது உம்முடைய கொள்கையைத் தழுவுவது அல்லது உம்முடைய மனைவியைத் தழுவுவதைப் பொறுத்துஉள்ளது'' என்றாராம். கிளாஸ்டன் முகத்தில் அசடு வழிந்தது.

அமெரிக்காவின் புகழ்பெற்ற நகைச்சுவை எழுத்தாளர் மார்க்டுவைன். அவர் இளமையில் ஒரு பத்திரிகையில் ஆசிரியராக இருந்தவர். வறுமையும் கடனும் அவரைத் தொடர்ந்தன. கடன் கொடுத்தவர்கள் கடனைத் திருப்பித் தருமாறு கேட்டார்கள் ஆனால் அவர் கொஞ்சமும்

கவலைப்படாமல் அவற்றை யெல்லாம் தட்டிக் கழித்து வந்தார்.

ஒரு நாள் வழக்கப்படி ஒரு கடிதத்தை அவர் கூடையில் போடும்பொழுது அவருடைய குமாஸ்தா ''சேர் அந்த கடிதத்தின் பின் பக்கத்தைப் படித்துப் பாருங்கள். பணத்தை உடனே அனுப்பாவிட்டால் வழக்குப் போடப்போவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது'' என்று நினைவுபடுத்தினார்.

''இரண்டு பக்கங்களிலும் எழுதப்படும் விஷயங்கள் கவனிக்கப்படமாட்டாது என்ற நமது முத்திரையை அதிலே போட்டு அவனுக்கே அதைத் திருப்பி அனுப்பிவிடு'' என்றார் மார்க்டுவைன்.

ஓர் இளம் எழுத்தாளர் பெர்னாட் ஷாவிடம் தான் மிகவும் கஷ்டப்பட்டு எழுதிய நாடகத்தைக் காட்டிக் கருத்துக் கேட்டார். நாடகத்தைப் படிக்கச் சொல்லிவிட்டு ஷா ஒரு கதிரையில் அமர்ந்தார்.

சிறிது நேரத்தில் குறட்டை ஒலி கேட்டது எழுத்தாளர் படிப்பதை நிறுத்தி விட்டு ஷாவைப் பார்த்தார். தூக்கம் கலைந்து எழுந்தார் ஷா. அப்போது எழுத்தாளர் ''உங்கள் கருத்தை அறிய வேண்டி அன்றோ வந்தேன்'' என்றார்.

ஷாவும் ''நானும் என் கருத்தைக் கூறிக் கொண்டு தானே இருக்கிறேன்'' என்றாராம்.

---

## ★ நிஜங்கள்

*உன் நினைவுகள்.........*
*என்னிதயத்தில் நிலவாய் ஜொலிக்கிறது!*
*என் பேனா.........*
*உனை மட்டும் கவிதையாய் உதிர்க்கிறது!*
*என் உதடுகள்.........*
*உனை மட்டும் உயர்வாய் அழைக்கிறது!*
*அந்த சப்தம்.........*
*உனக்கும் மட்டுமே சொந்தம்,*
*எனக்கு.........உன் பாசமனைத்தும் சொந்தம்!*

● S. ரமதா

## சீனத்து நினைவுகள் 3

முகம் திருப்பிய இடமெல்லாம் கடலாய்க் கண் குளிரப் பசேல்! சீனப் பெருஞ்சுவர் காணப்பட்ட மலை உச்சியில் நாங்கள்!

சுவர் இரட்டையானது இரண்டு சுவருக்கும் நடுவில் வீதி போன்ற ஒரு பாதை! அந்தப் பாதையில் நின்று சுவருக்கூடாக வெளியே பார்க்கக் கூடியவாறு சுவரில் துவாரங்கள் உள்ளன. சுவர் எழுப்பப்பட்ட காலத்தில்

கோகிலா மகேந்திரன்

அதற்குள் நின்று கடமை புரிந்த போர்வீரரை நினைவுபடுத்தும் வகையில், ஓரிரு சீன இளைஞர் அந்தக் கால உடை ஒப்பனையுடன் உல்லாசப் பயணிகளுக் காகக் காட்சி தருகிறார்கள். ஏனைய உல்லாசப் பயணிகள்

---

## அஃகரமுதல எழுத்தெல்லாம் நாவுக்கரசிக்கே சமர்ப்பணம்

அகில அண்ட ஈஸ்வரியே! ஆதியநாதியானவளே!
சரணம்!
இன்பம் தரும் இலக்குமியே! ஈன்றவளே தாயே!
சரணம்!
உலகை ஆளும் உத்தமியே! ஊழித்தாயே!
சரணம்!
எல்லாம் ஆனவளே! ஏவல் கெடுத்து அருள்பவளே!
சரணம்!
ஐஸ்வரியம் தருபவளே! ஒப்பற்ற சக்தியானவளே!
சரணம்!
ஓங்காரமானவளே! ஔவையின் நாவில் நின்றவளே!
சரணம்!
அ:காரமுதல எழுத்தானவளே! சரணம்! சரணம்!
சரஸ்வதித் தாயே சரணம்!

—இராம ஜெயபாலன்

செய்தது போலவே நாங்களும் அந்தச் சிவப்பு உடைப் போர் வீரர் வேட நடிகருடன் நின்று ஒரு படம் எடுத்துக் கொண் டோம். (பிற்காலத்தில் ஒரு வேளை ''பிள்ளை குட்டி'' எல்லாம் வெளி நாடு போன பிறகு, நரை தட்டிய கிழமாக வீட்டில் தனித்திருக்கையில் நினைவுச் சுகங்களை மீட்க, இந்தப்படங்கள் உதவக் கூடும் அல்லவா?)

இந்தப் பெரும் சுவரைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு மனித உழைப்புத் தேவைப் பட்டிருக்கும் என்பதே என் மனதில் தோன்றிக் கொண்டி ருந்த, அந்தக் கணத்துக்குரிய கேள்வியாகும். சீனரின் உழைப் பின் சிறப்பு வியக்கத்தக்கதே!

நியூ யுகின் (Niu yugin) என்ற பெண் விவசாயி 1333 ஹெக்டயர் பரப்புள்ள பாலை வனத்தைக் காடாக மாற்றிச் சீனத்தின் முதல் பத்துப் பெண் களில் ஒருவர் என்ற விருதைப் பெற்றமை பற்றி முதல் நாள் கருத்தரங்கில் அறிந்த தகவலை, நான் இச்சுவருடன் பொருத்திப் பார்த்துக்கொண்டேன். ஆனால் சீனாவிலும் கூடப் **Ph.D** எடுக் கும் பெண்களின் நூற்றுவீதம் (1993 இல்) 12% மட்டுமே என்று அவர்கள் கவலைப்படுகி றார்கள். பெண்கள் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டி இருக்கிறது என்று கூறி இன்னும் கடுமையாக உழைக்கிறார்கள். பக்கத்து வீட்டின் குந்தில் அமர்ந்து அரட்டை அடிப்பதை யும். ஊர் வம்பு பேசுவதையுமே தமது முழு நேரத் தொழிலாகக் கொண்ட எமது சகோதரிகளுக்கு இந்த விடயம் சமர்ப்பணம்.

முதலாவது சர்வதேசப் பெண்கள் மகாநாடு 1975ம் ஆண்டு மெக்சிக்கோவில் நடை பெற்ற போது அதில் 6000 பெண்கள் பங்கு பற்றினர். இரண்டாவது மகாநாடு 1980 இல் டென்மார்க் நாட்டின் கோப்பன் ஹேகன் நகரில் இடம் பெற்றபோது அதில் கலந்து கொண்ட பேராளர் எண்ணிக்கை 10,000 ஆக உயர்ந்தது. மூன்றாவது புகழ் மிக்க மகா நாடு 1985 இல் கென்யா நாட்டின் நைரோபி நகரில் நடைபெற்றபோது, பேராளர் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்திருந்தது. பத்து வருடங்களின் பின் 1995 இல் பீஜிங் நகரில் இருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஹெய்ரு நகரின் 40ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டி ருந்த மகாநாட்டுத் திடலில் சுமார் 30,000 பெண்கள் உல கின் 187 நாடுகளில் இருந்து கூடி, வரலாற்றில் அதிக எண் ணிக்கையான பெண்கள் கலந்து கொண்ட கீர்த்தி மிக்க மகா நாடு இது வென்றாக்கினார்.

மகாநாட்டின் சின்னம், எட்டுப்பெண்கள் (எட்டுத்திக்கி லுமிருந்து) ஒன்று கூடி, உல

கத்தை இயக்குவது போன்று அமைந்திருந்தது. சமத்துவம், வளர்ச்சி, சமாதானம்'' ஆகிய வற்றின் அடிப்படையில், மிகப் பரந்துபட்ட விடயத் தலைப்புகளில் மகாநாட்டின் பேச்சுக்கள் கலந்துரையாடல்கள், வேலைப் பட்டறைகள், கலாசார நிகழ்வுகள், ஊர்வலங்கள், கண்காட்சிகள் போன்ற பல நிகழ்வுகள் இடம் பெற்றன.

பாகிஸ்தானின் அப்போதையபிரதமர்பெனாசிர்பூட்டோ அவர்கள் மகாநாட்டில் கலந்து உரையாற்றும் போது, ''பெண்கள் மிக நீண்ட யுகங்களாக மௌனமாக இருந்து விட்டார்கள். இம்மகா நாட்டில் அவர்கள் மனம் திறந்து தமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முன் வைத்துள்ளார்கள்'' என்று சொன்னார்.

மகாநாட்டில் சிறப்புரை ஆற்றிய கிளாரி கிளிங்ரன் அவர்கள், ''இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பெண்களாகிய உங்களின் முகங்களுக்கூடாக, உலகப் பெண்கள் அனைவரையும் பார்க்க முடிகின்றது. உங்களின் மொழிகளுக் கூடாக உலகப் பெண்களின் ஒருமித்த குரலைக் கேட்க முடிகின்றது. உங்களுடைய சக்தியும், உங்களுடைய எண்ணங்களும், உங்கள் கருத்துக்களும், காரியமாற்றும் திறனும், உலக நாடுகளின் அரசுகளின் கண்களைத் திறக்கச் செய்யும்'' என்று சொன்னார்.

30 – 8 – 95 மாலை 5–00 மணிக்கு தேசிய ஒலிம்பிக் மைதானத்தில் மகாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்ட போது, மகாநாட்டு வாசகத்தை ஆங்கிலத்திலும் சீன மொழியிலும் கொண்ட பெரிய காற்றுக் கப்பல் ஆகாயத்தில் பறக்க விடப்பட்டிருந்தது. உலகப் பெண்களின் சமாதானத்துக்கும் ஒற்றுமைக்குமான சின்னமாக 20,000 புறாக்களும் பலூன்களும் பறக்க விடப்பட்ட காட்சி, கண் கொள்ளாக் காட்சியேயாகும்.

ஆபிரிக்கப் பெண்களின் சமாதானக்குழு, சமாதானச் சூளை உலகப் பெண்களின் அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் குன்யிங்சுபத்திரா மாஸ்டிற்றிடம் கையளித்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

மகாநாட்டுத் திடலின் ஒரு பகுதியில் நாள்தோறும் காலை 9–00 மணிமுதல் 11–00 மணி வரை சமகால உலக நிகழ்வுகள், அவற்றின் பின்னணியில் உள்ள விசைகள், அவற்றின் விளைவுகள் போன்றவை காத்திரமான விமர்சன நிலையில் முன்வைக்கப்படும் பேச்சுக்கள் இடம் பெற்றன. இது பெண்கள் 21ம் நூற்றாண்டுக்கான திட்டங்களைத் தீட்டப் பெரிதும் உதவியாக இருந்தது.

இதே சமயத்தில் திடலில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட சுமார் 125 கூடாரங்

களில் அல்லது மண்டபங்களில் பல்வேறு துறை சார்ந்த பட்டறைகள், கலந்துரையாடல்கள்–ஒவ்வொன்றும் இருமணித்தியாலம் கொண்டவை– நடைபெற்றன. யாங்கி லேக்கிலும், கும்பா ஸ்டேஜிலும் மாலை 7–30 முதல் இரவு 10–30 வரை வெவ்வேறு தரமான உலகளாவிய கலாசார அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன. மகா நாட்டிற்கு வந்திருந்த பேராளர் தாம் விரும்பிய நிகழ்வில் பங்கு பெறும் சுதந்திரம் பெற்றிருந்தனர். இது 30,000 பேராளர்களையும் நல்ல முறையில் அணைத்துப் பங்கு பற்றவைக்கும் சிறந்த உத்தி முறையாக அமைந்ததாயினும், ஒரு தனிநபரின் கோணத்தில் இருந்து பார்க்கும்போது, அவர் 124விடயங்களைத் தவறவிட்டே ஒன்றில் கலந்து கொள்ளும் 'கொடுமை' காணப்பட்டது இதனால் மகாநாட்டில் கலந்து கொண்ட எந்த ஒரு பெண்ணும் மகாநாட்டின் நிகழ்வுகளை முழுவதுமாக உள்வாங்கிய திருப்தியைப் பெற முடியாமல் போனது.

மகாநாட்டுக்கு வந்திருந்த பெண்களின் வயது 17 இல் இருந்து 80 வரை பரவியிருந்தது உலகில் எத்தனை வகையான உடைகள் இருக்குமோ, எத்தனை வகையான தலை அலங்காரங்கள் இருக்குமோ, எத்தனை வகையான தொப்பிகள் காலணிகள், கைப்பைகள் இருக்குமோ அத்தனையையும் ஒரே நேரத்தில் காண முடிந்தது அபூர்வமே ஆயினும் மொத்தத்தில் மகாநாட்டுப் பெண்கள் அனைவருக்கும் பகட்டுகள் இன்றி எளிமையாகக் காட்சி அளித்தமை அவர்களின் ஆளுமை முதிர்வைச் சுட்டுவதாக இருந்தது. (தொடரும்)

## யார் அழகு ?

ஒரு சமயம் சீதேவியும், மூதேவியும் திருமாலிடம் போனார்களாம். ''தங்கள் இருவரில் யார் அழகு?'' என்று கேட்டார்களாம். திருமால் இருவரையும் நடந்து போகச் சொன்னாராம். இருவரும் கொஞ்சத் தூரம் போனதும் திரும்பி வரச்சொன்னாராம். சீதேவியை பார்த்து ''நீ வரும்போது அழகாய் இருக்கிறாய்'' என்றாராம். மூதேவியைப் பார்த்து ''நீ போகும் போது அழகாய் இருக்கிறாய்'' என்றாராம்.

# என் கவிதை

த. ஜெயசீலன்

தினம் பல கொலைகள் வீழும்.
தெருவெலாம் குருதி ஊறும்
மனம் இலயித்திடுமென் கீதம்
மருள்; 'சா ஓலம்' சூழும்.
பிணங்கிடும் காமம் குண்டுப்
பிளிறலால் பிரியும். எந்தக்
கணத்திலும் பயம் தான் ஆழும்.
இதுளுமென் கவிதை வாழும்.

நிலாப்பிள்ளை தவழ்ந்து வானில்
சிதறிய சோறைத் தேட......,
உலாவிடும் தென்றல் மௌன
ஊர்வலம் போக......, நெஞ்சில்
'கலா' பற்றிக் காதல் எண்ணக்
கனவென......, இன்ப ராவை......
'பிலாவடிச் சென்றி A.K'
பிளக்கும் என் பாவோ பூக்கும்.

காற்றினைக் குளிர்த்தும் நாதச்
சுரக்குயில் கானம் இல்லை.
கூத்துடன் கும்மிப் பெண்டிர்
குரவையும் இல்லை. இங்கே
ஏற்றநீர்ப் பாட்டும்...... "ஏலோ"
இசைகளும் இல்லை ஆனால்......
'ஆட்லறி' இடிக்குள் மெல்ல
அனுங்குமென் கவிதைக் கிள்ளை.

எங்களின் துயரம் எல்லாம்
எரிய என் கவிதை சீறும்!
எங்களின் கதையைப் பூமி
அறிய என் விருத்தம் பேசும்
செங்களம் தாண்டி எந்தன்
சிந்துகள் முழங்கும்! எங்கும்
மங்களம் மலியுமட்டும்
மரணத்துள் என்பா கேட்கும்.

## தியாகம்

தியாகத்திற் கொருவன்
பாரிலே உள்ளான்
பார்க்க மனம் துடிக்குது
அவனைக் காண மனம் ஏங்குது
எங்கு இருக்கிறான் அவன்
பாரிலேயா - அல்லது
சொர்க்க லோகத்திலேயா
யாரைக் கேட்பது - என்
கேள்விக்குப் பதிலை
அவனையே தான் கேட்க வேண்டும்.

-துர்க்காயினி சிவராஜா
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

## கணவன் ஒன்று நினைக்க கம்பியூட்டர் ஒன்று நினைத்தது.

துருக்கியை சேர்ந்த செல்வந்தர் ஒருவருக்கு தனது திருமண வாழ்வு கசக்கவே தனது முதல் மனைவியை விவகாரத்து செய்து விட்டு, இன்னொருவரை மணப்பதற்காக தகுந்த ஒருத்தியை தெரிவு செய்வதற்காக கம்பியூட்டரை நாடினார். கம்பியூட்டரும் ஏற்ற மனைவியாக மீண்டும் முதல் மனைவியையே தெரிந்தெடுத்தது. செல்வந்தரும் பரந்த மனப்பான்மையுடன் தனது அன்பு மனைவியாக ஏற்று தனது வாழ்வைத் தொடர்ந்தார். எனவே திருமணங்கள் சொர்க்கத்தில் மட்டுமல்ல கம்பியூட்டரிலும் நிச்சயிக்கப்படுகிறன.

-இந்து விஞ்ஞானி-

# ஆசை

காலைப்பொழுதைக் கண்டு
களித்திட ஆசை
மாலைப்பொழுதைக் கண்டு
மயங்கிட ஆசை
நிலவொளியில் பாடம்
படித்திட ஆசை
இள வெய்யிலில்
படுத்துறங்கிட ஆசை
பூக்களைப் பார்த்து
பாடிட ஆசை
மீன்களைப் போல
துள்ளிட ஆசை
படித்துப் படித்து பெரிய
ஆளாகிட ஆசை
வெடியோசையில்லா ஊரில்
வாழ்ந்திட ஆசை
இதமான தென்றல் நான்
சுவாசிக்க ஆசை
நண்பிகளுடன் பழகிட
ஆசை - ஆனால்
அவர்கள் எல்லோரும்
இடம் பெயர்ந்து
அகதிகளாக .........

—சந்திரகலா மகேந்திரன்
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

கருமியான பணக்காரன் தான் வள்ளல்களில் சிறந்தவன். ஏனென்றால், அவன்தானே மொத்தமாக ஒரு பெரும் தொகையை உலகுக்கு விட்டுச்செல்கிறான்.

-மகா பாரதம்

# திருடரை திணறடித்த சிறுவர் [2]



## தேடுதல் நடவடிக்கை 4

மாலை நேரம்:-

திருடிவிட்டு இருப்பிடம் திரும்பிய திருடர்கள் காவலாளி (திருடன்) கட்டப்பட்டு இருப்பதையும் கதவு உடைக்கப்பட்டு சிறுவர்கள் தப்பிவிட்டதையும் கண்டு கடும் கோபமுற்றனர் காவலாளி நடந்தவற்றை தலைவனிடம் கூறினான்.

''முட்டாள் உன்னையும் காவலுக்கு விட்ட எனக்கு அடிக்கணும் செருப்பால: போயும், போயும் சிறு பயல்கள் கிட்டே ஏமாந்துகிட்டு நிக்கிறியே வெக்கமில்லாமல். எதைவைச்சுத் தான் உனக்கு ''வீரன்''னு பேரு வச்சாங்களோ தெரியாது'' என்று வார்த்தையால் சரமாரியாகத் திட்டினான் தலைவன். ''அது இருக்கட்டும் தப்பிய பசங்களை மடக்கணும் முதலில்'' என்று துரிதப்படுத்தினர் மற்ற திருடர்கள். காவலாளியின் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன. பிடேசையும் நண்பர்களையும் தேடிப்புறப்பட்டனர் திருடர்கள்.

''டேய் யாரோ தூரத்தில வர்றாங்களடா'' என்று கூறினான் நிஷாந். ''ஒரு வேளை திருடரா இருக்குமடா'' அனைவரும் ஒரு மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டனர் வந்தது திருடர்கள்.

ஆற்றங்கரைக்கு அருகில் வந்ததும் ஒருவன் ''டேய் பொடியன்கள் ஆற்றைக்கடந்து போயிருக்க மாட்டான்கள் இனியும் அவன்களை தேட நம்மால் முடியாது. ''நாம் தலைவரிடம் சென்று கூறி இப்பொழுதே வேறு இடத்துக்கு மாறவேணும் ஏனெனில் தப்பிப்போன பொடியள் பொலீசை கூட்டி வருவாங்கள்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றனர்.

இவற்றை மறைந்திருந்து ஒட்டுக்கேட்ட நண்பர்கள் 'டேய் இவங்கள் இதாலதான் இடம்மாறிப்போவாங்கள் இவங்களுக்குத் தெரியாம பின் தொடர்ந்து போனால் இவங்கள் எங்க முகாம்டுறாங்கள் என்று பார்க்கலாம்''

''நல்ல யோசனை தான்''

''ஆரு பின்னால் பயமில்லாம போறது?''

''நான் போகமாட்டேன்''

''நானுந்தான்''

''எல்லோரும் போவம்''

இதனை எல்லோரும் ஆமோதித்தனர்

சிறிது நேரத்தில் தங்க மூட்டைகளுடன் திருடர்கள் வந்து கொண்டிருந்தனர்

''டேய் வாறாங்களடா'' என நண்பர்களிடையில் கிசுகிசுப்பு

## கப்பலை கைப்பற்றல் 5

ஆற்றங்கரையை வந்தடைந்தனர் திருடர்கள். ஒரு கையில் மூட்டையும் மறுகையில்கைத்துப்பாக்கியுமாய் திருடர்கள் காணப்பட்டனர். ஒருவன் தன் கையில் இருந்த மரப்பலகையை ஆற்றுக்குள் தூக்கிப் போட்டான் இருவர் இருவராக அதில் ஏறி அமர்ந்தவாறு மறுகரையை அடைந்தனர் சிறிது தலையை நிமிர்த்தி அண்ணார்ந்து பார்த்தால் பிடேஸ் நண்பர்களுக்கு அன்று முடிவு. திருடர்கள் அனைவரும் அவ்விடத்தை விட்டு நடந்தனர். பிடேஸ் நண்பர்கள் அவர்களுக்குப் பின்னால் பூனைபோல பதுங்கிப் பதுங்கிச் சென்றனர். திருடர்கள் அரைமணித்தியால நடையின் பின்னர் ஒரு கடற்கரையை வந்தடைந்தனர். பிடேஸ் நண்பர்கள் கடலுக்கு அண்மித்த மரத்தோப்புக்குள் நின்று நடப்பவற்றை பார்த்துக் கொண்டு இருந்தனர். அப்போது தலைவன் ''டேய் நாங்க இந்த கடலை தாண்டி மறு கரையில் உள்ள காட்டில் போய் முகாமிட்டு இருப்பம் இந்த கடலைக் கடக்க ஒரு கப்பல் வேணும்''

''ஆம் தலைவரே கப்பலுக்கு எங்கே போவது?''

''எங்கே போவதா. ஒரு கப்பல் திருடுவது. அது நானே நமது கைவந்த கலை''

''கப்பல் கொள்ளையடிக்க தலைவரிடம் நல்ல திட்டம் இருக்குமே அதை சொல்லுங்கள் தலைவா?'' என்று ஐஸ் வைத்தான் குள்ளநரி.

''ஹி... ஹி... ஹி இப்ப நாங்க என்ன செய்கிறோம். ஒரு கப்பல் வர இந்தப் பாலத்தின் மேல் ஏறி ஒளிஞ்சிருக்கப்போறம்

கப்பல் அந்தப் பாலத்துக்கு கீழாகத்தான் போகும். உடனே நாம் சத்தம் எழாதவாறு கப்பலில் குதிச்சிடணும். சிறிது தூரம் கப்பல் சென்றதும் கப்பலில் உள்ளவர்களை சுட்டுக் கொன்று விட்டு கப்பலை நம் வசப்படுத்தலாம். ''திட்டம் எப்படி''?

''சுதி'' யான திட்டம் தலைவரே''

''அதோ ஒரு கப்பல் தலைவா'' என்றான் வாற்பேத்தை

''எங்கேடா''— இது தவளை

திகைக்காதீர்கள் இவை திருடர்களின் பெயர்கள்

''வாங்கடா எல்லோரும் பாலத்துக்கு மேல ஒளிவம்''

சிறிது நேரத்தின் பின் கப்பல் பாலத்துக்கு கீழால் வந்தது. தவளையும், வாற்பேத்தையும் தமது செயலைச் செய்தனர். அவர்களைத் தொடர்ந்து மற்றவர்களும் பாய்ந்தனர். கப்பல் சிறிது தூரம் சென்றதும் அனைவரும் கப்பலில் இருந்தவர்களைச்சுட்டுக் கடலுக்குள் தூக்கி எறிந்தனர்.

''எங்கேடா எமது கூட்டத்தில் மூவரைக்காணேல்லை''

''அவன்கள் தங்க மூடைகளைப் பாதுகாக்குறாங்கள்''

''புத்தி இருக்கு''

''ஹி .. ஹி... ஹி ..'' என்று சிரித்தபடி இல்லாத ''காலரை'' (சேட்கொலர்) இழுத்துக்காட்டினான் கூழ்முட்டை

''அனைவரும் கப்பலில் உள்ள பொருள்களைத் தூக்கி கடலில் எறியுங்கடா''. அப்படியேநாடந்தது.

ராபி

அப்போது—

பிடேஸ் நண்பர்களிடம் ''டேய் திருடங்கள் தங்கள் பொருட்களை எடுக்க திரும்ப பாலத்தின் கீழாக கப்பலைக் கொண்டு வருவாங்க. அப்போது நாங்க பாலத்தின் மேல் யாரும் காணாதபடி ஏறிக் கப்பலில் குதிக்கலாம் பிறகு கப்பலைத் திருடங்க கிட்டே இருந்து நாம கைப் பற்றலாம்'' என்றான் இரகசியமாக. தங்க மூடைகளுக்கு காவல் இருந்த திருடருக்குத் தெரியாதவாறு பாலத்தின் மேல் நண்பர்கள் ஏறிக்கொண்டவர்.

(தொடரும்)

---

**தூண்டி பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். ஏனெனில் அவை தான் தூண்டியின் தரத்தை உயர்த்தும் தூண்டுசோல்கள்.**

# மேரிகியூரி. அம்மையார்

இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்ற பெண்மணி என்ற பெருமைக்குரியவர் மேரி கியூரி ஆவார். பௌதிகத்திலும், இரசாயனத்திலும் பரிசு பெற்றார். போலந்து நாட்டில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த மேரி ஒவ்வொரு காசாகச் சேர்த்து சிறுதொகையை எடுத்துக் கொண்டு பாரிஸ் சென்று விஞ்ஞானம் கற்கத் தொடங்கினார். அங்கு பேராசிரியராக இருந்த பியரியை மணந்து கொண்டார்.

படித்துக் கொண்டிருக்கும் போது அவர் யாருடனும் பழகுவது இல்லை. விளையாட்டு பொழுதுபோக்கு என்று எதுவும் கிடையாது. சரியான உட்கொள்ளக்கூட வசதியில்லாமல் இருந்தது. வெறும் ரொட்டியும், தேநீரும் மட்டுமே அன்றாட உணவு. சத்துணவு இல்லாததால் பலமுறை களைத்துப் போய் மயங்கி விடுவார். விஞ்ஞானக் கல்வி கற்றுப் பட்டம் பெற்று விட வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. உணவைப் பற்றியோ உடல் நலம் கெடுவது பற்றியோ அவர் கவலைப்படவே இல்லை. தன் இலட்சியத்தை அடைவதொன்றே குறியாக இருந்தவர். அதில் அவர் வெற்றியும் பெற்றார்.

யுரேனியம் தானாக கதிர்களை வெளியிடுவதை அறிந்த பெக்ரல் என்பவர் அது பற்றி மேற்கொண்டு ஆராயும் பொறுப்பை கியூரி தம்பதியிடம் ஒப்படைத்தார். இந்நிகழ்வுக்கு கதிரியக்கம் என்ற பெயரிட்டவரே மேரி தான். இருவரும் மேற்கொண்டு ஆராய்ந்து யுரேனியத்தை விடப் பல மடங்கு சக்தி வாய்ந்த ஒரு பொருளைப் பிரித்தெடுந்து அதற்கு பொலோனியம் எனப் பெயரிட்டனர்.

## எஸ்.சங்கரன்

அடுத்து யுரேனியத்தை விட 20 லட்சம் மடங்கு அதிகக் கதிரியங்கம் கொண்ட ரேடியத்தைப் பிரித்தெடுத்தனர். இதற்காக இருவரும் நோபல் பரிசு பெற்றனர். சில ஆண்டுகளில் பியரி வீதி விபத்தொன்றில் மரணமடைந்தார். கவலையை மறக்க மேரி மேலும் தீவிரமாக ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டார். 1911இல் இரசாயனத் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அறிவுத் தாகம் கொண்டு தாய் நாட்டை விட்டுப் புறப்பட்டு வந்து வேறு நாட்டில் வாழ்ந்து பெரும் சாதனை புரிந்த அற்புதப் பெண் மணி

மிகுதி ம்பக்கம்

# அருளும் அன்பும் 3



# தொண்டர் தம்பெருமை

லோ. துஷிகரன்

இறைவன் எல்லாவற்றிலும் அடங்கி இருக்கிறானா அல்லது எல்லாவற்றையும் அடக்கி இருக்கிறானா என்று மனங்களில் ஏற்பட்ட குழப்பத்திற்கு சிறியதோர் விளக்கம்.

ஒரு பெண் தண்ணீர் அள்ளுவதற்காக குடத்துடன் குளத்தை நோக்கிப் போகிறாள். போனவள் குடத்தை அப்படியே குளத்துக்குள் அமிழ்த்துகிறாள் நீர் குடத்தினுள் முற்றாக நிரம்புகிறது. அப்போது அந்தக் குளத்து நீர் குடந்தினுள் அடங்கி இருக்கிறதா? அல்லது குடத்தை தன்னுள் அடக்கி இருக்கிறதா? சிந்தியுங்கள்.

உண்மையில் குளத்து நீர் குடத்தினுள்ளும், குளத்தைச் சூழவும் இருக்கின்றது. ஆகவே அடங்கியும், அடக்கியும் இருக்கின்றது. இறைவனும் அப்படித்தான் இறைவன் எல்லாவற்றிலும் டயின்று உறைகின்றான். எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கியும் வைத்திருக்கிறான்.

நாம் இறைவனை வணங்குகின்றோம். அப்படி இறைவனை நாம் வணங்குகிறோம் என்றால் எமக்கு இறையருள் கிடைத்துள்ளது என்பது தான் கருத்து.

உண்மையில் அவனது அருள் கிடைத்தால் தான் அவனை நினைக்க முடியும் வணங்க முடியும். இதைத்தான் மணிவாசகர் தனது திருவாசகத்தில்

''அவனருளாலே அவன்தாழ் வணங்கி'' என்கிறார்.

நாஸ்திகன் என்று சொல்லி அலைபவர்களின் நிலையும் இதுதான் அவர்களுக்கு இறைவனை வணங்குவதற்குரிய இறையருளும் தகைமையும் கிடைக்கவில்லை. என்றாலும் அவர்களை இறைவன் காக்காது விடுவதும் இல்லை.

இறைவன் தன் சுய உருவில் தோன்றி உயிர்களைக் காப்பதில்லை.

இளையவனாக முதியவனாக ஏன்?

சந்தன மேலாக, மன்மதப் புயலாக எல்லாம் தோன்றுவான்.

இறைவன் அன்பின் உருவானவன். அன்பு வேறு, சிவன் வேறு அல்ல, அன்பே சிவமாக அமர்ந்திருப்பார். ஆன்மா மீது இறைவனுக்கு ஆசை, இறைவன் மீது ஆன்மாவிற்கு ஆசை, இதில் இறைவன் தான் வெல்லுகிறான். ஆன்மா, தன்னுடன் இறைவனைச் சேர்ப்பதில்லை. இறைவன் தான், ஆன்மாவைத் தன்னுடன் சேர்க்கிறான். இதை உட்பொருளாக வைத்தே

''மண்ணின் மீது மனிதனுக்காசை, மனிதன் மீது மண்ணுக்காசை''

''மண் தான் இறுதியில் வெல்கிறது. இதை மனந்தான் நம்ப மறுக்கிறது''

என்கிறார்கள் இன்றைய திரையுலகக்கவிஞர்கள்.

இறைவன் தாய்க்கருணை உடையவன், தாயினும் நல்ல தலைவன். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவன்.

நாம் செய்யும் பிழைகளைப் பொறுப்பதில் தாய். நாம் கூறும் கட்டளைகளை ஏற்றுக்கொள்வதில் தாய். அருள் சொரிவதிலே தாய். இறைவனை தாயாகக் கண்ட, அந்த மணிவாசகர்.

''நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே''

என்றார் தனது திருவாசகத்திலே.

''ஒருவனை, அவன் தாய் தேற்றுவது போல் தான் உங்களைத் தேற்றுவேன்'' (ஏசா யா66:13) என்று கிறிஸ்தவ மதத்தவருக்கும் தாயாகவே காட்சியளிக்கிறார் இறைவன்.

# உழைப்பு

சி. சோ. பதந்தன்

கவலையோடு மணியைப் பார்த்தாள் செல்லம். பத்து மணி தாண்டி விட்டிருந்தது. அவரைக் காணவில்லையே?

மூத்தவன் குட்டிக்கு தாயின் முகத்தில் படர்ந்திருந்த சோகம் புரிந்துவிட்டது. எதற்கும் ஒரு தடவை கேட்டான்

''அம்மா! அப்பா இன்னும் வரலியா'' ... ... ...

''இல்லடா கண்ணு' குடிச்சுப்போட்டு எங்க விழுந்து கிடக்கிறாரோ'' ... ... ... கவலையோடு சொல்லி முடித்து விட்டு தன் செல்வங்களை ஏறிட்டாள். கணவனால் ஒரு சதம் கூடக் கிட்டாத குடும்பம் அது. மூத்தவன் குட்டிக்கு சுமார் பதின்மூன்று வயதிருக்கும். படிக்கிற பருவம் ஆனால் அதை அநுபவிக்க மண்ணெண்ணைப் பிரச்சினை விடவில்லை ஒரு குப்பி விளக்குத் தான் எரிவதுண்டு மற்றவர்கள் இருவருக்கும் ஆறு, எட்டு வயதுகள் தானிருக்கும். பெட்டைப் பிறவிகள்.

அக்கம்பக்கத்து நாய்கள் திடீரெனக் குரைக்கும் சத்தம் கேட்டது.

நாய்ச்சண்டையோ ... ... ... ?

விட்டுவிட்டுத்... ... ... தேய்ந்து... ... தேய்ந்து... ...,

புரிகிறது செல்லத்துக்கு ... ...

ஆமி நடமாட்டம்!

நாய்களின் ஓசை படிப்படியாக குறைந்து குன்றிவிடுகிறது.

''ஐயோ... ... அப்பா வரலியே''... ... இளையவள் ஏங்குகிறாள், மூத்தவன் துடிக்கிறான். செல்லத்துக்கு வியர்க்கிறது, பரபரக்கிறாள் – மணிகூட்டைப் பார்த்து, .

மூத்தவன் எழுந்து விட்டான். விளக்கை தூண்டி விடுகிறான்.

ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் அவன்.

''அம்மா! அப்பா வழமையா போற தவறண குயிலரிண்ட தானே!''

அம்மா செல்லம் தலையாட்டுகிறாள்; ''அதற்கென்னடா இப்ப''........,

''உதுல, கிட்டத்தானே கிடக்கு, போய் பார்த்துட்டு வரேனே... ...''

இளசுகள் இரண்டும் அண்ணனை கட்டிப் பிடித்தன,

''வேண்டாமண்ண, அப்பா வந்துடுவார்......''

''இல்ல, நான் வரேனே .........'' புறப்பட்டான், கொஞ்சி விட்டு.

''கவனமடா, ஊரடங்கு வேளை, கனதூரம் போகாதடா, குட்டி......''

மேலே பேச முடியாமல் செல்லத்துக்கு குரல் கம்மியது.

★ ★ ★

ஏதோ துணிவில், அம்மா பாவமெண்டு, அப்பாவின் பாசத்தில் புறப்பட்டுவிட்டான். உள்ளூரக் கலக்கம் தான். தூரத்தில் குயிலரிண்ட தவறணை இருண்டு கிடந்தது.

''அப்பா எங்க... ...?''

விழுந்து தான் கிடக்கிறாரோ?

கீழே பார்த்தபடி தவ்றணை மட்டும் நடந்து திரும்புவது என்று தீர்மானித்தான்.

''சனிப்பிடிச்ச அப்பா, இந்த அகால வேளையில் இப்படிக் குடிக்க வேணுமே?''

அப்பாவை கண்டு அவரிடம் குழைந்து அவரைத் திருத்த வேண்டும்!

ஆங்! தூரத்தில் யாரோ விழுந்து கிடப்பது தெரிந்தது அவனுக்கு;

றோட்டின் ஓரமாக, ஓதுக்குப்புறமான மரத்தின் அடியில் நீட்டி நிமிர்ந்து ....... செத்துப் போனாரோ...... ஈரல் கருகி......

''அது அப்பா தான், இப்படி அகாலவேளையில் குடிச்சு விழுந்து கிடக்கிறது. எண்டா அது எங்கட அப்பாவாத் தானிக்கும்''...... இந்த எண்ணம் வலுப்பெற்றது. அம்மா கேட்டாளே; அது போல–

''குடிச்சுப் போட்டு எங்க விழுந்து கிடக்கிறாரோ......''

கூப்பிட்டு அயலைக் குழப்ப அவன் விரும்பவில்லை, மெதுவாகக் கிட்டச் சென்றான்.

சரேலெனத் திரும்பிய அந்த ''அப்பா''......,

''டுமீல்'', ''டுமீல்'' என துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்க,

அங்கே,

''ஐயோ... ... அம்மா'' ... ... ... ... ... என்ற குரல் ஒலித்துத் தேய்ந்தது.

★ ★ ★

''அழாதயம்மா...... அண்ண வந்துடுவார்'' - செல்லம் இளசுகளுக்கு ஆறுதல் கூறினாள்.

பாவம், அதுகள் ஏங்கிய படியே தூங்கிப் போயின,

★ ★ ★

செல்லம் மணியைப் பார்த்தாள் நேரம் பத்தரை.

''குட்டி அப்பாவைக் கண்டு பிடித்திருப்பானோ'' ... ... ... அவளுக்கு உள்ளூரக் கலக்கமும் உண்டானது. ஊரடங்கு வேளையாச்சே!

கதவை ''தட், தட்'' என்று யாரோ தட்டினார்கள்.

அவளுக்குத் தெரியும்!

போய்த் திறந்தாள்.

எதிரே,... ...

எதிர்வீட்டுப் பெரிய மனிதர்!... ...

''வாங்க,'' ... ...

இரகசியமாய் அழைத்தாள்.

''அவர் வரவில்லையா? ... ...''

''அவர் அக்கா வீட்டை போறதா போனார், குட்டியைக் கொஞ்சம் தள்ளிப்போக விட்டிருக்கேன், கொஞ்ச நேரத்து வந்துடுவான்'' ... ...

பெரிய மனிதர் கொடுத்த நோட்டுகளை எண்ணினாள், உழைப்புக்கேற்ற திருப்தி தெரிந்தது அவள் முகத்தில்.

பெரிய மனிதர் கண்களில் போதை தெரிந்தது. அவளை இறுக, அணைத்தார். அவளோ மனதைக் கல்லாக்கி, உழைப்பில் ஈடுபட்டிருந்தாள்.

அப்போது தான் அது நடந்தது.

''டுமீல், டுமீல்'' ... .... வேட்டுக்கள்.

''ஐயோ ... ... குட்டிங்க, அவன் வெளியால போனானே, ஐயோ... ...'' பதறினாள் செல்லம்.

''அதற்கென்னடி இப்ப; நீ பேசாமக் கிட...'' செல்லத்தின் வாயைப் பொத்தியபடி சொன்னர் அந்தப் பெரியமனிதர்●

★ ★ ★

# பிரித்தானிய பிரபுத்துவமும் மக்கள் இராணி டயானாவும்

பிரித்தானியா இராணுவ ஆதிக்கத்தின் மூலமே உலகை தன் ஆட்சிப் பிடியின் கீழ் கொண்டு வந்தது, இதன் மூலமே தனது அரச வம்ச புகழை இன்றும் நிலைநிறுத்திக் கொண்டுள்ளது, ஆனால் டயானா அரச பிரபுத்துவ மேலான்மை நிலைக்கு எதிராக ஏழை எளியவர்களை அரவணைத்து மக்கள் சேவை செய்த தன் மூலமே உலகம் போற்றும் மக்கள் இராணியானார்.

எனவே கிட்லர் போன்ற கொடியவர்கள் போல் உலகை அழித்து அரியாசனம் அமைப்பதிலும் அன்பினால் உலகையே ஆளமுடியும் என்று வாழ்ந்து காட்டியவர் இளவரசி டயானா, அவர் வாழ்ந்து காட்டிய பாதை இந்த நூற்றாண்டி இறுதியின் (1997) மகத்தான சாதனை, இது வக்கிர சிந்தை கொண்டவர்களுக்கு பெரிய படிப்பினை, அன்பின் அரவணைப்பு இல்லாது ஏங்கிய டயானா, மனித தேவைகளின் மகத்துவத்தை புரிந்து கொண்டதில் வியப்பேதுவும் இல்லை இது ஜனநாயகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

இராம ஜெயபாலன்

மக்கள் தேவைகளையும் உணர்வுகளையும் மதிப்போம் இதுவே மனித கௌரவம், அறியாமையை அறவே அழித்து மக்கள் ஆட்சி உலகெங்கும் பரவ இறைவனை பிரார்த்திப்போம், இதுவே இளவரசி டயானவுக்கு நாம் செய்யும் பிரதி உபகாரம்.

## பழைமைப்பித்தர்



இலட்சாதிபதி:- ஐந்துசதத்துக்கு ஐஸ்பழம் அடிபட்டுச் சாப்பிட்ட காலத்தை நினைக்க, திரும்பி வராதோ எண்ட கவலையாய் இருக்கு

அப்பாவி:- ஏன் இப்ப சாப்பிட வெக்கமே?

உளறி:- நீ ஒன்டு அவர் இப்ப ஐஞ்சு சதத்துக்கு தரமாட்டாங்களா எண்டு கவலைப்படுகின்றார்.

-இ. ஜெ. பாலன்



# சினிமாக் கவிஞர்கள்

ச, முகுந்தன்

திரைக்கவிஞர்களை எடுத்தோமானால் கண்ணதாசன், பட்டுக்கோட்டையார் பாடல்கள் காலத்தாலழிக்கப்பட முடியாதவை. ஆனால் இன்று அவை பழசு என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் கூட பல இளைஞர்களால் வெறுக்கப்படுவது விசனத்திற்குரியதே.

இவர் அமிழ்ந்தது மதுபோதையில்; மிதந்தது தமிட்பாதை யில் இவர் வாய் சப்பியது தாம்பூலம்; துப்பியது தமிழ் எச்சில் மதுபோதையில்; இவர் மதுக்கைகூட எதுகைக்கு ஏதுவாகத் தான் எழுதும். இவர் தான் தொட்டுப் பார்த்த தோகையரின் மொட்டுச்சிறு உதட்டிடையே எட்டிப்பார்த்த பல்லணிகளைக்கூட தண்டியலங்காரச் சொல்லணிகளாகக் கண்டு சொக்கியவர். கலிங்கத் துப் பரணியிலிருந்து காளமேகம் வரை கற்று ருசித்த இவர் அவற் றிலிருந்து. தாம் பெற்ற இலக்கியச்சுவையை இயன்றமட்டிலும் பாமரனும் அறியும் வண்ணம் திரைமெட்டுக்களில் கலக்கிக் கொடுத் தார் ''முத்தணி கொங்கைகளாடவா'' என்ற ,திருப்பொற்சுண்ணப் பாடலின் சந்த ஓட்டத்தில் இவர் எழுதிய ''கட்டோடு குழலாட'' பாடல் வயது வேறுபாடின்றி எல்லோராலும் வரவேற்கப்பட்டது. கலிங்கத்துப்பரணியில் கூடல் மயக்கத்தில் துகில் மறந்து நிலவொ ளியை ஆடையென உடுத்த மங்கையரின் மயக்கமும்; இவர் பாடல் வலைக்குள் எளிமையாகச் சித்தரிக்கப்படுகிறது. கம்பராமாயணத் தின் உண்டாட்டுப் படலத்தில் ஊடுருவிய நயமான கற்பனைகளை இவர் கடன் வாங்கி எழுதிய பாடல்கள் கம்பராமாயணம் அறியாத வர்க்கு கூட இலக்கியத்தின் இனிமையை அறிமுகப்படுத்தி ''மாதா உடல் சலித்தாள்– என்று தொடங்கும் பட்டினத்தாரின் தத்துவ முத்துக் கூட ''பெற்றவள் உடல் சலித்தாள் பிள்ளை நான் கால் சலித்தேன்...... என திரை மெட்டாகச் சரஸ்வதி சபதத்தில் வருகிறது. இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் வரும் கற்பனைகள் கருத்துக்களை இவர் தனது திரைப்படப் பாடல்களில் பயன்படுத்தியதற்கு கார ணம் தமிழ் இலக்கியச் சுவையை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காகவே இதை அவரே கூறியுமிருக்கிறார். ஆனால் அதற்

காக கண்ணதாசனுக்கு கற்பனை வளம் இல்லை என்று கூறுபவர்கள் அறிவிலிகள். அவரது கற்பனா வளத்திற்கும் சந்த ஓட்டத்திற்கும் ஆயிரம் பாடல்களைச் சான்றாக்கலாம். பாகப்பிரிவினை படத்தில் சப்பாணியான தன் தலைவனின் குறையை பெரிது படுத்தாது அவனுக்கு ஆறுதல் கூறித் தலைவி பாடும் ''தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் பாடலில் வரும் ''காள்களில்லாமல் வெண்மதி வானில் தவழ்ந்து வரவில்லையா இரு கைகளில்லாமல் மலர்களை அணைத்து காதல் தரவில்லையா ...... வரிகளில் அவர் தன் அசகாய கற்பனைத் திறத்தை சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமாக வெளிப்படுத்தியதை இங்கே குறிப்பிடல் பொருத்தம். வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதனின் வயலினோடு இக்கவிஞரின் கவித்துவம் போட்டியிட்டபோது பிறந்ததாகச் சொல்லப்படும். ''வான் நிலா நிலா அல்ல உன் வாலிபம் நிலா'' என்ற பாடல் ஒன்றே போதும் இவர் சிறப்புக் கூற நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேசவேண்டும் என்ற பாட்டில் சங்கப் புலவராகத் தெரியும் இவர் புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களைப் போற்றி பல்லவர் காலப் புலவராகிறார். ''மதுரையிற் பறந்த மீன்கொடியை உன் விழிகளில் கண்டேனே என்று காவியச்சுவையாய் பாடித் தலைவியை தமிழகத்துக்கு ஒப்பிட்டு கம்பநாடானுடன் கலந்துறவாடி பின் பார்த்தேன், சிரித்தேன், அத்திக்காய் போன்ற பாடல்களில் வார்த்தை ஜாலம் ஆடி நாயக்கர் காலத்துப் புலவர்களை ஞாபகப்படுத்துகிறார்.

கப்பலோட்டிய தமிழன் படத்தில் பாரதி பாடல்களை இடம் பெறச் செய்தனர். அப்படத்தைப் பார்த்து விட்டு வந்த தன் கிராமமக்கள் ''ஆரோ பாரதியாமே அவரும் நம்ம கண்ணதாசனை மாதிரியே நல்லாப்பாடல் பண்றார்'' என்று உரையாடியதாக கவிஞர் வைரமுத்துவே தன் நூலில் குறிப்பிடுகிறார். இதிலிருந்து கவியரசு கண்ணதாசன் எந்த அளவுக்கு தன்னைத் திரைப்படப் பாடல்களில் நிலை நாட்டியுள்ளார் என்பதை உணரலாம்.

(தொடரும்)

---

தூண்டி 2இன் அட்டைப்பட விளக்கத்திற்கான பரிசினை பெறுபவர்.

**செ.காயத்திரி**

கொக்குவில் இந்துக் கல்லூரி

இவரிற்கு எமது வாழ்த்துக்கள்.

# தேடுதல் முடிவற்றது தேடுவோர் திருப்திப்படுவதில்லை

## விதி

ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு.

Chalk இற்கும் பூமிக்கும் இடையேயானதாமே செப்பம் செய்யும் இச்சோடி விசைகள் சமனானவை.

Chalk அசைகிறது. பூமி அசையவில்லையே – Chalk ஐ நோக்கி? பூமிக்குப் பஞ்சி அதிகம். திரவியம் அதிகமாதலால் இயங்கவிரும்பாமல் இருக்கின்ற தன்மையும் அதிகம். சடத்துவத் தன்மை அதிகம். உந்த மாற்றத்துக்குரிய விசை புறககணிக்கத்தக்க அளவு சிறிது .. (வால் வெள்ளி வியாழனை மோதிய சம்பவம் பற்றிய தகவல் மாணவர்களுக்கு ஆரோக்கியமானவை)

'உந்த மாற்று வீதம் அழுத்திய விசைக்கு விகிதசமனாய் அவ்விசை தாக்கும் நேர்கோட்டுத் திசையில் நிகழும்.

உந்தம்? ஓர் உடலின் திணிவு, வேகம், இரண்டினதும் பெருக்கம்; திணிவின் வேக மடங்கு; வேகத்தின் திணிவு மடங்கு, கிறிக்கற் பந்தின் வேகம் கூட உந்தம் கூடும். (லொறியின் வேகம்கூட உந்தம் கூடும்) ஒரே வேகத்துடன் இயங்கும் மென்பந்தா சுமைப்பந்தா 'கிறிக்கற்றில்' உந்தம் கூடவாகவுள்ளது? சுமைப்பந்து ஒரு வேகத்துடன் அசையும்போது அதன் உந்தத்தை மாற்ற சில விசை கூடியநேரம் எடுக்கும். சிலவிசை குறைந்தநேரம் எடுக்கும். முன்னைய விசை சிறிது பின்னைய விசை பெரிது என்கிறார் நியூற்றன் எனலாம். ஒரே திணிவுக்கு உந்த மாற்றுவீதம் என்பது வேகமாற்று வீதத்தின்

## இரத்தினம் இரவீந்திரநாதன்

ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி

நியூற்றனின் இரண்டாம் இயக்க விதியினை இப்போது மாணவர்களுக்கு நாம் அறிமுகமாக்குகின்றோம்.

திணிவுப் பெருக்கம்; எனவே அது ஆர்முடுகலின் திணிவுப் பெருக்கம்; இந்த அளவிலே 1 அலகு திணிவின்மேல் 1 அலகு

ஆர்முடுகலை விளைவிக்கும் விசையின் அளவு எவ்வளவோ அவ்வளவும் 1 N (Newton) என்றவாறு விசையின் நியம அலகாக N ஐ நியூற்றன் பெரியாரைக் கௌரவிக்கும்வகையிலே தெரிவு செய்வதன் மூலம் ஆர்முடுகலின் திணிவுப்பெருக்கம் (Ma) விசையாகிறது.

மேல்போந்த எண்ணங்களுக் கூடாக வளர்க்கப்படுகின்ற மாணவன் இப்போது திணிவு என்ற எண்ணக்கரு பற்றி - அடிப்படைக்கணியம் பற்றி - இத்தறுவாயிலே இரண்டாம் முறையாகச் சிந்திக்கத் தலைப்படுகிறான்.

திணிவு என்பதால் நாம் விளங்கிக் கொள்வதென்ன? ஒரு உடலின் திணிவு என்பது அது வைத்திருக்கும் திரவியத்தின் அளவு என்றால் இந்த உடல் அடைக்கும் வெளியின் அளவு கனவளவு முறையைக் கொண்டு திரவியத்தை அளத்தலா?

(தொடரும்)

### போட்டிகளுக்கான பரிசுகள்

தூண்டி 2இல் வந்த போட்டிகளுக்கான விடைகளை பலர் சரியாக எழுதி இருந்ததால் திருவுளச்சீட்டு முறையில் பரிசு பெறுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களுக்கான பரிசு அவர்களது முகவரிக்கு அனுப்பிவைக்கப்டும்

o o o o o o o o o o o o o o o o o o o o o o o o o o o

மேரிகியூரி. அம்மையார்

என்று இவரைக் கூறலாம். பாரிஸ் பல்கலைக் கழகம் இவரை பௌதிகத்துறைப் பேராசிரியராக நியமித்தது.

இறுதிவரை கதிரியக்கம் பொருள்களை ஆராய்வதிலேயே கவனம் செலுத்தி வந்த மேரி அந்த கதிரியக்கத்துக்கே தமது உயிரையும் பலி கொடுத்தார். அதனது தாக்குதலே அவரது வாழ்வையும் முடித்தது.

(14ம் பக்க தொடர்ச்சி)

o o o o o o o o o o o o o o o o o o o o o o o o o o o

# தேவ -ஆதாரம்

அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்!
தஞ்சம் என்றடியவர்கட்கு அருள்புரி மாத்தனையனே!
விஞ்சு தமிழ்பாட வினையறுத்து ஆள்பவனே!
நெஞ்சத்துள் நீ நின்று, நல்லவற்றை தாருமையா!

— கொக்கூர் பாலன்

# அப்பா அம்மா மகன்

''அம்மா ஏன் கத்திறியள்? ஏழும்புவம் தானே.'' சுதா போர்வையை உதறிவிட்டு எழுந்தாள். ''எந்தநாள் பார்த்தாலும் அவர் ஒரு பக்கம் இவ ஒரு பக்கம் கத்திக்கொண்டு ..'' சுதா முணுமுணுத்தாள். ''அவ, குமர்ப்பிள்ளையாம்..... ..! வாயைப்பார்!'' தாயின் அதட்டல் காற்றோடு கலக்க அவள் கிணற்றடிக்குச் சென்றாள். ''சிவா, முரளி என்ன உங்களுக்கு பிறிம்பாகச் சொல்ல வேணுமே? எழும்புங்கோவன்'' வேறு வழியின்றி அவர்கள் இருவரும் படுக்கையை விட்டு எழுந்தனர்.

''பத்தாதற்கு கதைப்புத்தகம் வேறை. முன்னுக்கு வந்து இருந்திட்டினம். ஏன் பாடப் புத்தகங்கள் எங்கே? இனி மற்ற அலுவல் எல்லாம் என்ன மாதிரி? சுதா வீடு வாசலைக் கூட்டு சிவா நீ போய் பாணை வேண்டிக்கொண்டு வா. முரளி நீ போய் புத்தகத்தை எடு பள்ளிக்கூடம் இல்லை எண்டவுடனே புத்தகத்தையும் மறந்து போட்டியள் என்ன.'' லட்சுமியின் உரத்த குரலில் கட்டளைகள் பறந்தன. ''ஏனப்பா தாயும் பிள்ளையும் சேர்ந்து கத்திறியள். அயலட்டையில் என்ன நினைப்பினம்'' துவாயையும் கையில் ஏந்தியபடி குளியலுக்கு கிணற்றடியை நோக்கிச் சென்றார் சதாசிவம். ''அண்ணை ஒரு அலுவல்!'' திரும்பிப் பார்த்தார். கேற் வாசலில் கோயில் ஐயரின் மூத்த மகன் நின்றான். 'உங்களிட்டை அப்பா ஒரு பிறப்புச் சேட்டுபிக்கற் எடுக்கத் தந்தவராம். இண்டைக்கு எடுக்கலாமே என்று கேட்கச் சொன்னவர் ''இரண்டு கிழமையாய் ஒவ்வொரு நாளும் காலையில் சொல்லி வைச்ச மாதிரி வந்து நிற்பான்

**து. வைத்திலிங்கம்**

சதாசிவத்திற்கு எரிச்சலாய் இருந்தது. ''தம்பி அங்கு, தேர் அர்ச்சனை மாதிரி. எல்லாம் கொடுத்திருக்கு. முந்தினமாதிரி நேரத்துக்கு எடுக்க முடியாது! தபாலில் வருமெண்டு சொல்லும்'' மறுமொழி கூறிவிட்டு திரும்புமுன்னர் ஒருவர் சயிக்கிளில் வந்து இறங்கினர். ''தம்பி இண்டைக்கு பென்சன் ரிசீற் கொடுப்பினமோ'' ஒவ்வொரு மாதமும் அவர் வந்து கேட்டார். இது வழமை. ஓய்வு பெற்ற ஸ்ரோர்கீப்பர். ''இந்தக் கிழமையும் கொழும்பிலிருந்து ரிசீற் வரவில்லை அண்ணை செவ்வாய்க்கிழமை வந்து பாருங்கோ'' கடைசி நேரத்திலை

ஊரோடு சேவை ஆற்றிவிட்டு ஓய்வு பெறலாம் என்று நினைத்தது பிழைபோலை! மனதுக்குள் கூறிக்கொண்டே குளியலை முடித்துக்கொண்டு மறுபடியும் சுவாமி அறையில் கைநிறைய செவ்வரத்தம் பூக்களுடன் நுழைந்தார்.

வீட்டுப்பின் விறாந்தையில் உரலில் சம்பல் இடிக்கும் சத்தம் வீட்டை இரண்டு படுத்தியது. ,'விடிய எழும்பி முகம் கழுவிப் போட்டு நிற்கினம். நெற்றியிலை வீபூதி பூசின அடையாளம் கூட இல்லை. ''நாங்கள் வீபூதி பூசினனாங்கள் அப்பா. அது அழிஞ்சு போச்சுது. சுதா, சிவா, முரளி மூவரும் ஒரே குரலில் கூறினார்கள். ''பவுடரை மட்டும் ஒழுங்கா பூசிக்கொள்ளுங்கோ. பாணை கணக்காக வெட்டி ஒவ்வொரு கோப்பையில் வைச்சுச் சம்பலையும் போட்டாள் லட்சுமி. சதாசிவத்திற்கு தான் சாப்பிடும் போது தன்கூடவே எல்லோரும் இருந்து சாப்பிட வேண்டும். எவ்வளவு தான் வற்புறுத்தினாலும் லட்சுமி எல்லோரும் சாப்பிட்ட பின்புதான் சாப்பிடுவாள். கொஞ்சக்காலம் சொல்லிப் பார்த்தார். சதாசிவம். அவளோ கேட்பதாக இல்லை. பின் பேசாமல் விட்டுவிட்டார். ''அண்ணை இருக்கும்போதும் இந்த ஒரு இறத்தல் பாண்தான். இப்பவும் அப்படித்தான்.'' முரளி சினத்துடன் கூறினான். அவன் கடைக்குட்டி. செல்லம்தான். எதுவானாலும் தட்டுநிறைய இருக்க வேண்டும். சாப்பிட்டானோ சாப்பிடவில்லையோ! ''இஞ்சை பார் முரளி. காலைச்சாப்பாடு லைற்றாய் இருக்கவேணும். பேசாமல் சாப்பிடு. லட்சுமி கூறினாள். அவள் ஒருவித உணர்ச்சியுமின்றி இதைக் கூறினாலும் உள்ளுக்குள் அழுதது. ஒரு றாத்தல் எனக் கூறப்படும் பாண் இப்பொழுதெல்லாம் இளைத்து ஒடுங்கி விடுகின்றது. நாளுக்குநாள் விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கின்றது. பிள்ளையள் சாப்பிடுகிற வயது. என்றாலும் என்ன செய்ய முடியும். சதாசிவத்துக்கு சிந்தனை ஓடுகிறது. ''அண்ணை அங்கை பட்டர், அப்பிள் எண்டு ஆசைதீரச் சாப்பிடுவான் என்னப்பா! ஜேர்மனியிலை விதவிதமான பாண் செய்கினமாம்.'' சிவா கூறினான். ''வெளிநாடு என்றால்அப்படித்தானே.அங்கை எல்லாம் என்னமாதிரி சனங்கள் சீவிக்கினம். நாங்கள் இந்தப் பாணும் சம்பலும் .....'' சுதா கூறிக்கொண்டே முகத்தை சுழித்தாள். ''குமாரின்ரை கடிதம் இண்டைக்கு வந்தாலும் வரும்... சதாசிவம் மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். ''நீங்கள் என்ன சாத்திரம் பாத்தனியளே! அவனுக்கு வீட்டு நினைப்பு மறந்து போச்சோ தெரியாது. இப்ப இரண்டு மாதமாச்சு காயுதம் வந்து!''

(தொடரும்)



# நாணில்... இருந்து...

## இராமர் பதில்கள்

செந்தில்ராஜன் கோண்டாவில்

★ தங்களது 3ம் இதழ் தாமதிக்கிறது காரணம் ஏதோ?

ஒரே அடியாக ஏறினால் இறைவன் ஏற்றி விட்டு வேடிக்கை பார்க்கிறான் என்பது அர்த்தம். தடக்குகிறான் என்றால் சிந்திக்க வைக்கிறான் என்பது அர்த்தம். சிந்தனை தான் ஒருவனைத் தூண்டும்.

ஜெ. சிந்தியா, திருநெல்வேலி

★ ஆசிரியரே உங்களுக்கு வேறு வேலை கிடைக்க வில்லையா?

சும்மா வாழ்ந்தோம் என்பதில் என்ன வேலை கிடக்கிறது. இப்படியும் வாழ்ந்தோம் என்பதால் உங்கள் மூளைக்கும் வேலை.

ஜோ. ஜோகராஜன். வவுனியா

★ ஆங்கிலம் தமிழை விழுங்குகிறதா?

மொழி என்பது ஊடகம் புரியாத வரைக்கும் பிரச்சினை. பொதுவாகப் புரிந்தால் ஏற்பதில் தவறில்லை ஆனால் எம்மிடம் வளம் இருக்க நாகரீக மோகம் கொண்டலைவது என்னவோ அசிங்கம் தான்.

கதிர். தியாகராஜன். நீர்வேலி

★ திரையுலகப் பாடல்களின் தரம் பற்றிய தங்கள் கருத்தென்ன?

இதைக் கூறுவதால் மட்டும் சாதிக்கக் கூடியது ஒன்றுமில்லை. நல்லவற்றை எடுப்போம். அதன்படி நடப்போம். தூண்டியில் ''சினிமாக் கவிஞர்கள்'' பற்றி ச. முகுந்தன் எழுதும் முழுப்பகுதியையும் வாசித்த பின் விபரமாய் அறியலாம்.

---

## எழுதுங்கள்..............

சிறுகதைகள், கட்டுரைகள், அறிவியல் துணுக்குகள், நகைச்சுவை விடயங்கள் போன்றவற்றை எழுதி அனுப்புங்கள். அவை 120 சொற்களுக்கு உட்பட்டதாயின் வரவேற்கத்தக்கது. தகுதி ஆனவை ''தூண்டி'' இதழில் பிரசுரிக்கப்படும்.

# வார்த்தையால் சொந்தமானோர்

மீண்டும் நாங்கள் வந்து
மீளக்குடியமர்ந்த பின்
''தூண்டி'' என்றோர் நல்லிதழ்,
துளிர்விடக் கண்டேன்
தூண்டியே - பல தடைகள் கண்டு
தளர்வின்றி வளர்ந்திட
வேண்டுமருளீசன் அருளால்
வேகமாகய் வளர்ந்திடு

—சி. சபாநாதன்ஸ்
சங்கரத்தை

தூண்டியிது தூண்டி
என வாழ்த்து பல கோடி
கால மது வென்று
நாடு பல கண்டு
மானிடத்தின் மீது
கோபமது கொண்டு
நேசமது காண
வாழ்த்து பல கோடி
யாழதனின் ஓசை
தனித்துவத்தின் ஆசை
தூண்டலதுவாக - என்
வாழ்த்து பல கோடி.

—கவிஞர்
சீனாச்சானா

3. தூண்டி இதழ் (மாசி 1997) தரமானதாக அமைந்திருந்தது. நெஞ்சை அள்ளும் வகையில் ஆக்கங்கள் அமைந்திருந்தன. சூப்பர். பலதரமான நிகழ்ச்சிகள் ''தொடரும்'' என்றிருப்பதால் தவிப்புடன், அடுத்த தூண்டி இதழ் வரவிற்காய் நாட்களை சபித்தபடி காத்திருக்கிறோம்.

''தூண்டி''யின் வாசகி
S. ராமதா

4. தங்களின் தூண்டி இதழ் துலங்கல் - 2 கண்டேன், உண்டேன், அற்புதம்.........

—கி. மாருதி
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

5. ''தூண்டி''யே உன் உதயம் என்றும் எம் புலனங்கங்களை தூண்டி துலங்கலை வெளிக்காட்ட தொடர்ந்து தூண்ட எனது வாழ்த்துக்கள்.

—அ. அஜந்தன்
யாழ் மத்திய கல்லூரி.

★ நூற்றுக்கணக்கான வாசகர் கடிதங்கள்வந்து குவிந்துள்ளது. அனைத்தும் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்

இச்சஞ்சிகை ''தூண்டி'' ஆசிரியர் குழுவால் கொக்குவிலில் உள்ள அபிராமி அச்சகத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சிந்தனைச் சிதறல் - 3

(1) இரண்டாம் சர்வதேசப் பெண்கள் மகாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது.

(2) இரண்டு நோபல் பரிசுகளை பெற்ற பெண்மணி யார்?

(3) யுரேனியம் கதிரியக்கம் உடையது என்பதை முதலில் அறிந்தவர் யார்?

(4) ''உந்தம்'' என்பதில் இருந்து விளங்குவது யாது?

(5) விசையின் அலகு யாது?

(6) சரஸ்வதி சபதத்தில் வரும்பாடல் யாருடைய ஆக்கம்?

(7) ''ஹெரிட்ருமன்'' என்பவர் எந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர்?

(8) ''ஆர்முடுகல்'' என்பதில் இருந்து யாது விளங்குகிறீர்!


பால்மா வகைகள், பலசரக்குப் பொருட்கள்,

இரும்பு வகைகள், வாகன ரயர்ரீயூப்புக்கள்,

மற்றும்

அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்

எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் களஞ்சியம்**

மருத்துவமனை வீதி, மானிப்பாய்.

பால்மா வகைகள்
பலசரக்குப் பொருட்கள்
இரும்பு வகைகள்
வாகன ரயர் ரியூப்புகள்



வாகன ரேடியேற்றர்கள்
குசன் வகைகள்
அலுமேனிய பாத்திரங்கள்
மற்றும்

**கட்டிடம் கட்டத் தேவையான**
சீமெந்து
பிளைவூட்சீற்
பெயின் வகைகள்

**அனைத்தையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் எமது ஸ்தாபனத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.**

# அம்பிகை களஞ்சியம்

(304 110) மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

## தூண்டி 2 இன் சிந்தனைச் சிதறல்
# பரிசு பெறுவோர் விபரம்

முதலாம் இடம்
காயத்திரி சிற்சபேசலிங்கம்
ஆண்டு 8
யாழ்/ இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் இடம்
இரவீந்திரன் சுஜந்
ஆண்டு 8
யாழ்/ இந்துக் கல்லூரி

மூன்றாம் இடம்
தனுஷா இலட்சுமணன்
ஆண்டு 10
வேம்படி மகளிர் கல்லூரி

**'சிந்தனைச் சிதறல்'**, அட்டைப்பட விளக்கம் போன்ற போட்டிகளுக்கு, விடை எழுதி அனுப்பும் போது இவ் ''வாசகர் தூண்டல்'' படிவத்தையும் நிரப்பி அதனுடன் இணைத்து அனுப்புங்கள். எமக்கு கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 31. 10. 97 ஆகும். ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

## ஆசிரியர் குழு

★ த. செல்வமனோகரன்
★ லோ. துஷிகரன்
★ சோ. ரவீந்திரன்

காரியாலய முகவரி

''தூண்டி''
கேணியடி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

''தூயவை துணிந்துவிட்டால் பழிவந்து சேர்வதில்லை''



## வாசகர் தூண்டல்

முழுப்பெயர்:- ......................................................

கற்கும் பாடசாலை:- ......................................................

வகுப்பு:- ......................................................

வதிவிடமுகவரி:- ......................................................

......................................................

...................................... ......................................

திகதி ஒப்பம்